RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# திருநங்கையரின் வாழ்வியல் நோக்கில் உணவுப் பொருட்கள்

**பி. பத்மினி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641029, தமிழ்நாடு, இந்தியா.

# Transgender Lifestyle Oriented Food Items

**P. Padmini** [a, *]

[a] Department of Tamil, Kongunadu Arts and Science College(Autonomous), Coimbatore-641029, Tamil Nadu, India

* Corresponding Author: ppadmini_ta@kongunaducollege.ac.in

Received: 03-04-2024
Revised: 13-06-2024
Accepted: 27-06-2024
Published: 02-08-2024

## ABSTRACT

Transgender has a unique history in human society. Transgender is one of them. People living all over the world fulfill their needs and rituals with the food they use for their daily needs. From the ritual of adoption, which is performed from the day one is born male and eventually becomes feminine, from the day one joins one's race, to the ritual of reassignment surgery to physically transform one's self into a female. In this article, we can see how they fulfill the traditional rituals necessary for their life with food through the betel nut, betel nut, milk, bread etc. which they use until the death ceremony and also the contribution of food in their beliefs, worships and rituals.

**Keywords:** Transgender, Foods, Diets, Rituals, Beliefs, Innovations

## முன்னுரை

உழவின்றி அமையாது உணவு. உணவின்றி அமையாது உலகு. அத்தகைய உணவைச் சுற்றித்தான் உலகமே இயங்குகிறது. ஒரு மனிதனின் அவசியத் தேவைகளில் முதலாவதாக இடம் பெற்றிருப்பது உண்ணும் உணவே ஆகும். பின்னரே உடுக்கின்ற உடை, இருக்க இடம் இவையெல்லாம். ஒவ்வோர் உணவுக்குப் பின்பும் வரலாறு என்பதையும் தாண்டி அதற்குள் நாகரிகம், கலாச்சாரம், பண்பாடு, மதம், அரசியல், வணிகம், அறிவியல், மருத்துவம் என்று பல்வேறு அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. அவ்வகையில் திருநங்கையரின் வாழ்வியலில் உணவுப்பொருட்களின் அவசியத்தை இக்கட்டுரை வாயிலாக அலசி ஆராயப்படுகிறது.

## திருநங்கையர்

திருநங்கையர் எனப்படுபவர்கள் பிறப்பால் ஆண் என்று அடையாளப்படுத்தப்பட்டு பதின்ம வயதுகளில் தங்களைப் பெண்ணாக உணர்ந்து பெண்களாகவே வாழ முற்படுவோரைக் குறிக்கும். இவர்கள் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. தொல்காப்பியத்தில்,

'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்

இவ்வென அறியும் அந்தத் தமக்கிலவே

உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும்' (தொல்காப்பியம், சொல்லதிகாரம், ப.4)

இவ்வாறு திருநர் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெற்றிலை (தத்துச் சடங்கு)

வெற்றிலை ஒரு மருத்துவ மூலிகை. இது கொடியாகப்படர்ந்து பூக்கும் தாவர இனத்தைச் சார்ந்ததாகும். தலைவாழை இலை போட்ட விருந்தில் சுவைக்குக் குறைவில்லாமல் விதவிதமான உணவுவகைகளை திருப்தியாக உண்ட பிறகு வயிற்றுச் செரிமானத்திற்காக வெற்றிலை மெல்லுவதென்பது தமிழர்களின் பாரம்பரிய வழக்கமாகும். வெற்றிலைப் பற்றி சிலப்பதிகாரத்தில்,

'உண்டு இனி திருந்த உயர்பே ராளர்

அம்மென் திரையலோடு அடைக்காயீத்த..." (சிலப்பதிகாரம், கொலைக்களக் காதை - 54)

இவ்வாறு மதுரைக்கு வந்த கோவலனும் கண்ணகியும், மாதரி என்ற இடையர்குலப் பெண் வீட்டில் தங்கி இரவு உணவு உண்ட பிறகு கண்ணகி கோவலனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்ததை மேற்கண்ட வரிகள் புலப்படுத்துகின்றன. இதில் திரையல் என்பது வெற்றிலையையும், அடைக்காய் என்பது பாக்கினையும் குறிக்கிறது. மேலும்,

'சந்து பூக்கச் சாடை பாக்கிலை

கஞ்சுக நெய் ஆய்ந்த விவரெண் மராயத்தார்' (இந்திர விழவூரெடுத்த காதை -157)

இவ்வரிகள் மூலம் மன்னர்களுக்கென்று தாம்பூலம் மடித்துக் கொடுப்பதற்கென்றே தனியாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும் அவர்களின் கரங்களில் தவழ்ந்த அவ்வெற்றிலைப் பெட்டி நகைப்பெட்டியினைப் போல அலங்காரத்துடன் இருந்ததையும் அறியமுடிகின்றது. இத்தகையச் சிறப்புப் பெற்ற வெற்றிலை திருநங்கையர் வாழ்வியலில் முக்கிய அங்கம் வகிப்பதை,

"சட்டாய்னா, ஒரு தட்டுல வெள்ளைத்துணிப் போட்டு அதுல வெத்தல பாக்கு, நிறை சொம்புதண்ணி எல்லாம் வச்சுருப்பாங்க. தூக்குதாணியும் மறக்காம இருக்கும், அதான் எச்சகொளம்பி, வெத்தல போட்டு எச்ச துப்புற சொம்பு, இதெல்லாம் வச்சு எல்லார் முன்னாடியும் நிக்க வச்சாங்க... இந்தியாவுல இருக்கிற திருநங்கை எல்லாரும், தன்னோட வாழ்க்கையில சந்திக்கிற முதல் சடங்கு" (மஹாலக்ஷ்மி ராகவன்,கொற்றவை,ப.50)

அறியமுடிகின்றது. இவ்வாறு திருநங்கையர் கூட்டமைப்பில் புதிதாக வரும் இளைய திருநங்கையைத் தத்தெடுக்கும்போது வெற்றிலைப்பாக்கினை சாட்சியாக வைத்து மகளாகத் தத்தெடுக்கும் முதல்சடங்கினை அவர்கள் நிகழ்த்துவதை இப்புதினவரிகள் மெய்ப்பிக்கின்றன. இந்நிகழ்வே திருநங்கையரின் பிறப்புநிலையினையும் இன்னாருக்கு மகளாவதையும் இச்சமூகத்திற்கு அறிவிக்கும் முறையாகக் கருதப்படுகிறது.

## பால் (பாலூற்றும் சடங்கு)

திருநங்கையர் தங்களது பாலின மாற்று அறுவை சிகிச்சை முடிந்த நாற்பது நாட்கள் வரை அவர்கள் பத்திய உணவை மேற்கொள்கின்றனர்.அதுவரை அவர்கள் பால் ஊற்றாமல் தேநீர் அருந்துவதைப் பழக்கமாகக் கொண்டிருப்பதை அவன்-அது அவள் என்ற புதினத்தில்,

"பால் ஊத்துன பின்னாடிதான், நீதூத் சாயா குடிக்கணும். அதுவரை உனக்கு'காலா சாயா'தான் என்றாள். கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பால், தயிர், மோர் என்று எதையும் கண்ணில் காட்டவில்லை" **(யெஸ்.பாலபாரதி, அவன்-அது=அவள், ப.166,167)**

இவ்வாறு கோமதிக்கு நிர்வாணம் எனப்படும் பால் மாற்று அறுவை சிகிச்சைக்குப்பின் கொடுக்கப்படும் உணவுகள் குறித்துப் பதிவாகியுள்ளது. இவ்வாறு திருநங்கையர் பெண்கள் பூப்படைந்த நாட்களில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் முட்டை, நல்லெண்ணெய், உளுந்தங்களி போன்றே அவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. இதன்மூலம் திருநங்கையரின் உணவுசார் பழக்கவழக்கங்களை அறிய முடிகின்றது. மேலும்,சமூகத்தில் இறந்தவர்களுக்கு மூன்றாம்நாள் பாலூற்றும் சடங்கு நடைபெறுவதைப் போல திருநங்கையரும் தங்களது பாலின மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்ட நாற்பதாம் நாளில் அச்சடங்கினை நிகழ்த்துவதை உன்னைவிட்டு விலகுவதில்லை என்ற புதினத்தில்,

> “எங்க தெய்வமான ‘மாத்தா’ படத்துக்கு முன்னாடி விதவிதமான பழங்கள், இனிப்புகள் கண்டிப்பா கேசரி இருக்கும். அப்புறம் ஒரு கொடம் நிறைய பால் வச்சி. கொடத்தோட வாய்பக்கம் மாவிலை வச்சி… நடுவிலே ஒரு தேங்கா வச்சிருப்பாங்க…கொடத்துல உள்ள பாலை கடல்லயோ அல்லது வேற ஏதாவது நீர்நிலையிலோ ஊத்தினப் பொறகு, தங்களோட பொறப்பு உறுப்பை இயற்கைக்குக் காட்ட வேண்டும். இப்ப நாங்க ஆண் இல்லை…” **(எஸ்.செல்வசுந்தரி, உன்னைவிட்டு விலகுவதில்லை, ப-82,83)**

இவ்வாறு திருநங்கையர் வாழ்வியலில், தங்களது வழிபாடுகளிலும், சடங்குகளிலும் நீர்ம உணவாகிய பால் முக்கிய இடம்பெறுவதை அறியமுடிகின்றது. இதன்பின்னரே அவர்களின் வாழ்க்கை தொடங்குவதாக இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.

## ரொட்டி (இறப்புச் சடங்கு)

உலகில் அனைத்து இன மக்களும், அநேக மதத்தைச் சார்ந்தவர்களும் உண்ணும், பல கலாச்சாரங்களும் ஏற்றுக் கொண்ட ஓர் உணவு ரொட்டி. அதன்பெயரால் திருநங்கையர் சமூகத்தில் இறந்தவர்களுக்குச் செய்யப்படுகின்ற சடங்கினை ‘ரொட்டிச் சடங்கு’,’தலைக்கட்டுச் சடங்கு’,’ரவுண்டாப்புச் சடங்கு’ எனவும் அழைக்கின்றனர்.இதனை வடமொழியில் தீஸ்வா என்றும் கூறுவர்.இச்சடங்கு இறந்தவருக்குச் செய்யும் முப்பதாவது நாள் சடங்கு ஆகும்.இதனைத் திருநங்கையர் வெகு விமர்சையாக கொண்டாடுவதை, அவன்-அது=அவள் என்ற புதினத்தில்,

> “மண்டபத்தின் நடுவில் குத்துவிளக்கு ஏற்றி, எல்லோரும் ஒப்பாரி வைத்து அழுதனர். பழங்கள், புடவை, பணம் என்று நடந்த சடங்கை வினோதமாகப் பார்த்தாள் கோமதி.அவள் பார்க்கும் முதல் தீஸ்வா…எல்லோருக்கும் புடவை, எல்லோருக்கும் பலமான விருந்து வழங்கி” (**யெஸ்.பாலபாரதி**, **அவன்-அது=அவள்**, **ப**.144,145)

இவ்வாறு இறந்தவர் படத்திற்குமுன் அவர் விரும்பி உண்ட உணவுவகைகளை படையலிட்டு, பின்னர் இச்சடங்கிற்கு வரும் திருநங்கையருக்கு விருந்தளித்து ரொட்டி எனப்படும் இறப்புச் சடங்கினை நிறைவு செய்கின்றனர்.

## காய்கறி விருந்து (வழிபாட்டுச் சடங்கு)

திருநங்கையர் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கூவாகம் கூத்தாண்டவர் கோவிலில் தாலிக்கட்டித் தாலியறுத்து வழிபாடுகள் முடிந்த பின்னர் விதவைக் கோலத்துடன் வீட்டிற்கு வந்து இறைவனுக்கு காய்கறி வகைகளுடன் படையலிட்டுப் பூசை செய்தபின் மீண்டும் சாதாரண வாழ்க்கைக்குத் திருநங்கையர் திரும்புவதை, மூன்றாம் பாலின் முகம் என்ற புதினத்தில்,

> “நடுவீட்டில் சில சாமி படங்கள், குத்து விளக்கு இரண்டு எரிந்துக் கொண்டிருந்தது. பெரிய வாழையில் சாப்பாடு. அதில் சாம்பார், காய்கறிகள், கறிவகைகள்…’என்னம்மா அப்படி பாக்குற இன்னிக்கு கூத்தாண்டவர் மறுபூஜை. அதாவது தாலியறுத்த நாங்க 30 நாள் வெள்ளைப் புடவையில் இருப்போம். 31வது நாள் இந்த மாதிரி பூஜை போட்டுகலர்புடவைமாத்திக்குவோம்…” (பிரியாபாபு, மூன்றாம் பாலின் முகம், ப. 93)

இவ்வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

## உணவு சார்ந்த நம்பிக்கைகள்

திருநங்கையர் தங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு நிகழ்விலும் உணவு சார்ந்த நம்பிக்கைகளை நழுவவிடாமல் தங்களின் தனிப்பட்ட சமுதாயத்தை அடையாளப்படுத்துவதற்காக அதனைக் கட்டிக்காத்து வருகின்றனர். அத்தகைய நம்பிக்கைகளை,

- நிர்வாண அறுவை சிகிச்சைக்குச் செல்லும் அரவானிக்கு செய்யப்படும் சாமி பூசையின் போது தேங்காய் கோணலாக உடையக்கூடாது.
- நிர்வாண அறுவை சிகிச்சைக்குச் செல்லும் அரவானிக்கு செய்யப்படும் சாமி பூசையின் போது தேங்காய் அழுகி இருத்தல் கூடாது.
- பூசைப் பொருட்களில் இரண்டு அன்னாசிப்பழம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.
- வெள்ளைநிற கேசரி பௌத்மாதாவிற்கு படைக்க வேண்டும்.
- பாலூற்று சடங்கின்போது விநாயகருக்குப் பால் ஊற்றினால் அரவானியின் வாழ்க்கைப் பாலைப் போன்று தூய்மையாக இருக்கும்.
- சாப்பாட்டிற்குப் போடப்பட்ட இலையைத் தாண்டக்கூடாது.
- சேவல்கறி உண்ணக்கூடாது.
- அறுவை சிகிச்சையின் போது பால்காப்பிக் குடிக்கக்கூடாது.
- அறுவைசிகிச்சை செய்துக் கொண்ட அரவானியின் தலைமாட்டில் நாற்பது நாட்கள் ஒரு தேங்காய், இரும்பு, எழுமிச்சை ஆகிய மூன்றும் இருக்க வேண்டும். (முனைவர் ந.அறிவுராஜ், மூன்றாம் பாலினம்-ஒரு சமூக இனவரைவியல், ப.52, 54)

இவ்வாறு திருநங்கையரின் வாழ்வியலில் தேங்காய், அன்னாசிப்பழம், பால், எழுமிச்சைப் பழம் போன்ற உணவுப்பொருட்கள் இடம்பெறுவதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

பிறப்பால் ஆணாகப் பிறந்த ஒருவர் தனது ஆண் தன்மையிலிருந்து பிறழ்ந்து பெண்தன்மையை மிகுதியாகப் பெற்று மாற்றம் கொள்வதைத் தொல்காப்பியத்தின் வாயிலாகத் தெளிவாகக் காணமுடிகின்றது. அத்தகையோரை திருநங்கை என்ற சொல்லாடல் கொண்டு தற்காலத்தில் அழைப்பதைப் பார்க்கமுடிகின்றது. திருநங்கையரின் தத்துச் சடங்கினில் வெற்றிலையும் பாக்கும் முக்கிய இடம்பெறுவதை அறியமுடிகின்றது. பாலூற்றும் சடங்கினில் பால், முட்டை, நல்லெண்ணெய், உளுந்தங்களி போன்ற உணவு வகைகளைத் திருநங்கையர் பயன்படுத்துவதையும் அறியமுடிகின்றது. வழிபாட்டுச் சடங்கினில் வெள்ளைநிற ரவை கேசரி, அன்னாசிப்பழம், தேங்காய், காய்கறிகள், பழவகைகள் போன்ற உணவுகள் முக்கிய இடம் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. இறப்புச் சடங்கினில் பிரியாணி, கறிக்குழம்பு போன்ற உணவுகளை விருந்தளிப்பதன் வாயிலாக இறைச்சி உணவுகளுக்கு அவர்கள் தருகின்ற முக்கியத்துவம் குறித்து அறியமுடிகின்றது. இவ்வாறு திருநங்கையர் சமூகத்தின் வாழ்வியலில் பயன்படுத்தப்படும் உணவுப்பொருட்கள், உணவு சார்ந்த பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உணவுமுறைகள் அவர்களுக்குரிய தனித்ததொரு பண்பாட்டினை வெளிப்படுத்துவதை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

## References

மஹாலக்ஷ்மி ராகவன், 2022, கொற்றவை, ட்ரான்ஸ் பப்ளிகேஷன்ஸ், எண்:49, 3வது குறுக்குத் தெரு, விஸ்வநாத புரம், மதுரை - 625 014 .

யெஸ்.பாலபாரதி 2008 அவன்-அது=அவள்,தோழமை வெளியீடு, 5 டி, பொன்னம்பலம் சாலை, கே. கே. நகர், சென்னை- 78

எஸ். செல்வசுந்தரி 2016 உன்னைவிட்டு விலகுவதில்லை, இனிய நந்தவனம் பதிப்பகம், எண் : 17, பாய்க்காரத் தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி - 620 003

பிரியாபாபு 2008மூன்றாம் பாலின் முகம், சந்தியா பதிப்பகம், எண்; 57-53ஆவது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083.

முனைவர். ந. அறிவுராஜ் 2008 மூன்றாம் பாலினம், பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License